
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
புணர்ச்சிபத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1.அன்னை ஆண்டாளும் புணர்ந்தாள் ஆசான் மாணிக்கவாசகரும் புணர்ந்தார்!
2.பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும்
3.இறைவனுடன் கலந்த ஆண்டாள்.
4.இசையால் ராமனுடன் கலந்தவர்
5.உயிரில் மனமடங்க
6.இறைவனுடன் கலந்த காரைக்கால் அம்மையார்
7.நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்
8.நெக்கு நெக்கு உள் உருகி உருகி
9.இறை வழிபாட்டில் ஏழு படிகள்
10. திருவாசகம் தரும் இறைவழிபாடு

### 1.அன்னை ஆண்டாளும் புணர்ந்தாள் ஆசான் மாணிக்கவாசகரும் புணர்ந்தார்!

புணர்ச்சி என்பது, ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும் நடவடிக்கை என்ற அளவில் புரிந்துகொள்பவர்கள் சமூகத்தில் மிகுதி.

இவ்வாறானவர்களால், இறையியலில் உள்ள ‘புணர்தல்’ எனும் சொல்லின் பொருளை உணரவும், விளங்கிக் கொள்ளவும் இயலாது.

இறைவனைப் புணர்தல் என்றால், இறைவனுடன் உடலுறவு கொள்ளும் நடவடிக்கை அல்ல. தன் உடல், மனம் ஆகியனவற்றை முற்றும் முழுதாக பரம்பொருளுக்கே ஒப்படைத்தல் என்று பொருள்.

ஒரு பெண், தனது இறைச் சிந்தனை வழியாக இறைவனைப் புணர்தல் தமிழர் மரபில் விளைந்த விடுதலையின் வெளிப்பாடு.

பொதுவாகவே காம உணர்ச்சியினைப் பாடல்களாகப் பாடி, பொதுவெளியில் அவற்றை வெளியிட்ட பெண்கள் தமிழகத்தில் பலர். அவ்வைக்கும் அதியமானுக்குமான காதலும் காமமும் வெளிப்படையானவை.

‘முட்டுவேன்கொல் தாக்குவேன்கொல்’ என்ற பாடலில், ‘எனக்குக் காமம் மிகுந்துவிட்டது. நான் இப்போது என்ன செய்ய?’ என்று பித்து தலைக்கேறிப் பாடினாள் அவ்வை.

இப்பாடல்களை அக்காலத் தமிழரின் சங்கங்கள் போற்றின, ஏற்றன. பெண்கள் காமத்தை வெளிப்படுத்துவதையோ, புணர்ச்சி குறித்த கருத்துகளைத் தம் வாழ்வின் கொள்கைகளாக அமைத்துக் கொள்வதையோ அக்காலத் தமிழ்ச் சமூகம் தடுக்கவில்லை.

இவ்வாறு தம் காமத்தை வெளிப்படுத்திய பெண்கள் எல்லோரும் ஒழுக்கக் கேடானவர்கள் அல்லது ஏதோ ஒரு வகையில் மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டவர்கள் என்று புரிந்துகொள்வதுதான் நவீனப் பகுத்தறிவின் வழக்கம்.

இறைவனைப் புணர்தல் என்பது ஆண், பெண் ஆகிய இருவருக்குமான ஒழுங்கு.

‘சிவத்தின் அரவணைப்பு கிட்டும்போது, தவம் செய்பவன் ஆணாகவே இருந்தாலும் தன்னை ஒரு பெண்ணாகக் கருதும் நிலை உருவாகும்’ என்பது திருமந்திரத்தில் உள்ள மந்திரங்களில் ஒன்று.

‘உமை அம்மையின் அருளைப் பெறுதல் என்பது அவளிடம் பிச்சை எடுப்பதல்ல, உமை அம்மையுடன் கலவி கொள்ளுதல்தான்’ என்பதும் அதே திருமந்திரத்தின் பாடல்களில் பொதிந்துள்ள கருத்து.

ஆதி சங்கரர் தன், சௌந்தர்ய லகரியில் உமையன்னையைக் காமத்தின் குறியீடாகவும் விவரிக்கிறார்.

திருமந்திரத்தின் கருத்துகள் பலவற்றை ஒற்றி இயற்றப்பட்டது சௌந்தர்ய லகரி.

‘பொல்லா மணியைப் புணர்ந்தேனே என்றார் ஆசான் மாணிக்கவாசகர். புணர்ச்சிப் பத்து எனும் பதிகம், மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்குமான புணர்ச்சியின் நிலைகளை விவரிக்கிறது.

‘புணர்ப்பதொக்க எந்தை என்னை ஆண்டு பூணநோக்கினாய்
புணர்ப்பதன்றி தென்றபோது நின்னோடென்னோடு என்னிதாம்
புணர்ப்பதாக அன்றிதாக அன்புநின் கழற்கணே
புணர்ப்பதாக அங்கணாள புங்கமான போகமே’
என்பது திருவாசகம்.

ஆணும் ஆணும் புணர்ந்த ஓரினச் சேர்க்கை என்றுதான் நவீனப் பகுத்தறிவு இதைப் பார்க்கும். அதன் எல்லையும் பரப்பும் மனித உடல்களுடன் கட்டுண்டது.

மாணிக்கவாசகர் தம்மை முற்றும் முழுதாக இறையுடன் கலக்க விட்டவர்.

அப்பர், இறைவனின் அடியாரானார். சுந்தரர், இறைவனின் தோழன் ஆனார். சம்பந்தர், இறைவனின் பிள்ளையானார். மாணிக்கவாசகர் இறைவனின் அங்கமானார்.

எவரெல்லாம் இறையின் அங்கமாகத் தம்மை உணர்கிறாரோ அவரெல்லாம் இறையுடன் கலவிகொள்கிறார் என்பது இயல்பு. இதுவே படைப்பின் விதியும் ஒழுங்கும்.

அன்னை ஆண்டாளும், ஆசான் மாணிக்கவாசகரும் இருவேறு நெறிகள் வழியாக இறை எனும் ஓர் இலக்கை எட்டியவர்கள்.

ஆண்டாள், திருப்பாவை இயற்றினார். மாணிக்கவாசகர், திருவெம்பாவை பாடினார். இறைமீது கொண்ட காதலில்

இருவருக்கும் உள்ள ஒற்றுமையை உணரும் தகுதி கொண்டோரால் மட்டும்தான் புரிந்து கொள்ள முடியும்.

தேவரடியார் எனும் சொல் வேறு, தேவதாசி எனும் சொல் வேறு. இறைவனுக்கும் இறைவிக்கும் தம்மை ஒப்படைத்துக் கொண்ட பெண்கள் தேவர் அடியார்.

அக்காலத்தில் இது மதிப்புமிக்க செயல். பிற்காலச் சோழப் பேரரசர்கள் குடும்பப் பெண்களின் பெயர்கள் தேவரடியாருக்குப் பட்டமாக வழங்கப்பட்டன.

சோழர்குலப் பெண்கள் பலர் தேவரடியாராக மாறி வாழ்ந்தனர். தேவரடியார்கள் திருமணம் புரிந்துகொண்டு குடும்பம் நடத்தினர். ஒருசிலர் மணம் புரியாமல் இருந்தனர்.

ஆண்டாள் தன் முலைகளும் இடையும் கண்ணனுக்கானவை எனப் பாடினார் என்றால், அதுதான் ஒப்படைப்பின் பண்பு. ‘உடல் பொருள் ஆவி முழுதும் உனக்கே சொந்தம் என வெற்று வார்த்தைகளால் காதல் செய்வோருக்கும் அவ்வாறான காதலைச் சொற்களில் விற்பனை செய்வோருக்கும் ஆண்டாளின் இறைக் கலவி புரிவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

முருகப் பெருமான் ஆலயத்தில் ஆணும் பெண்ணும் புணர்ச்சியில் ஈடுபட்டதாக பரிபாடல் பதிவு செய்துள்ளது.

இயேசுவுக்கு முந்தைய இசுரேல் சமூகத்தில் இவ்வாறான புணர்ச்சிவழி வழிபாடு நிகழ்ந்தது வரலாற்றில் பதிவாகியுள்ளது.

திருக்குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களில், ‘சிவபெருமானது இடை அழகும் மார்பழகும் பெண்களால் விவரிக்கப்படுகிறது’.

முருகன் என்றாலே அழகும் இளமையும்தான் என்பது தமிழ் மறையின் உட்பொருள். பருவம் எய்திய பெண்கள், வெறிகொண்டதுபோல் அரற்றும்போது, ‘இப்பெண்ணின் மனதில்

வேலன் குடிகொண்டுள்ளான்" என்று ஆற்றுப்படுத்துவது சங்கத் தமிழர் பண்பாடு.
அதற்கு "வேலன் வெறியாட்டு" என்று பெயர். ஒரு பெண்ணால் தன் காமத்தை ஊரார் முன்னிலையில் வெளிப்படுத்த முடியும் என்பதற்கான சான்றுகள் இவை.

நிலைமொழியும் வருமொழியும் இணைவதைக் கூட, 'புணர்ச்சி" என்று குறித்த மொழி இது. நிலைமொழியும் வருமொழியும் மாற்றமில்லாமல் இணைவது, 'இயல்புப் புணர்ச்சி' என்றாகும்.

நிலைமொழியும் வருமொழியும், திரிந்து இணைவது விகாரப் புணர்ச்சி" என்றாகும்.

புணர்தல் நிகழ்ந்து கொண்டேதான் உள்ளது. சொற்கள் புணர்கின்றன. மழை நிலத்தைப் புணர்கிறது. வெம்மை ஈரத்தைப் புணர்கிறது. அமைதி ஓசையைப் புணர்கிறது. இருள் ஒளியைப் புணர்கிறது.

இவற்றை எல்லாம் உணர்வோர் எக்காலமும் இறையைப் புணர்கிறார்கள்.

"புணர்ச்சி என்றால், ஆண் குறியும் பெண் குறியும் மோதிக்கொள்ளும் நடவடிக்கை" என்றளவில் மட்டும் வாழ்வோருக்கு இவை எல்லாம் புரியாது.

"அன்னை ஆண்டாள் கண்ணனைக் கலந்தாள்" என்பதை இறை உணர்வுகொண்டோர் புரிந்துகொள்ளும் முறைவேறு, இறைவன் மனித உடல் எடுத்து வந்தானா என்ன?" எனக் கேட்பது நவீனப் பகுத்தறிவாளர்கள் முறை.

உடலைக் கடந்து மனம் உண்டு, மனத்துக்கும் அப்பால் சித்தம் உண்டு. அன்னை ஆண்டாளும் கண்ணனும் மணந்தார்கள், புணர்ந்தார்கள் என்பதை உடல் இன்பங்களை மட்டுமே கருதி வாழ்வோரால் எக்காலமும் புரிந்து கொள்ள முடியாது. அவரவருக்கு என்ன தகுதியோ அதன்படியே புரிதல்கள் அமையும்.

மாணிக்கவாசகரும் ‘இறைவனைப் புணர்ந்தவர்’தான். அவரைப் பற்றிய எந்தக் கேள்வியும் இதுவரை எழுந்ததில்லை. நவீனப் பகுத்தறிவின் அக்கறை பெண்களின் புணர்ச்சி குறித்து மட்டும்தான் எழுமோ!

‘அர்த்தநாரீசர்’ எனப்படும் அம்மையப்பர் வடிவம், ‘ஒன்றே இரண்டாகி, இரண்டும் கலந்து ஒன்றாதல்’ எனும் புணர்ச்சி நிலையின் குறியீடாக அமைக்கப்பட்டது. அன்புகொள்ளுதலின் இறுதி அல்லது உச்சம் கலவி! இப்போதுள்ள அறிவின் அவலத்தைக் கொண்டு அன்பு எனும் மேன்மையை அளவிட இயலாது!

“சுடர்பொன. குன்றைத் தோளா முத்தை
　　வாளா தொழும்பு கந்து
கடைபட் டேனை ஆண்டு கொண்ட
　　கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட்டு இன்னுஞ் சார மாட்டாத்
　　தன்னைத் தந்த என்னார் அமுதைப்
புடைபட்டு இருப்ப தென்றுகொல் லோஎன்
　　பொல்லா மணியைப் புணர்ந்தே.” (திருவா.பா438).

- ஒளி விடும்பொன்மலையை,
- துளைக்கப்படாத முத்தை,
- அருளே வடிவானவனை,
- கரிய திருமாலும் பிரம்மனும் இதுவரை தேடிக் காண மாட்டாதவனை,
- என் அரிய அமுதத்தை,
- என் செதுக்கப்படாத மாணிக்க மணியை,
- கடையனாகிய என்னையும் வீணே ஒரு தொண்டான ஏற்றுக் கொண்டவனை,
- தன்னையே எனக்குத் தந்தவனை, பொருந்தி இருப்பது எப்போது?

### மலமொழிந்த காட்சி – வேதாத்திரியம்

"ஊன்காணும் தோற்றத்தில் கருத்தால் கூர்ந்து,
களங்கமிலா நுண்ணியக்க மாக வுள்ள
விண்கண்டு. அதன்இயக்க ஒழுங்காய் ஆற்றும்
வேகத்தில் விவேகமாம் அறி வறிந்து,
நுண்மாண் நுழைபுலனால் நுணுகி, மேலும்
நுண்ணுவின் பிறப்பிடமாம் பர முணர்விர்!
மண்கடந்து, விண்கடந்த, வெளிகண்டால் மும்
மலமொழிந்த காட்சியதே மாதவம் ஆம்!" (ஞாக.பா.1459)

வேதாத்திரிய திருவாசக சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே! வாழ்க வளமுடன்.

## 2. பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும்

அவன் இறங்கிய நொடியில் கனத்த அமைதி நிலவிற்று, கூட்டத்தினர் நெருப்பையே உற்று பார்த்து கொண்டிருந்தார்கள்.

நந்தனோ நீரில் இறங்கி நடப்பவன் போல சத்தமின்றி, துளி கதறல் இன்றி அலறல் இன்றி மிக இயல்பாக நடந்து வெளிவந்தான். அவன் உள்ளே போகும் பொழுது இருந்த தோற்றத்துக்கும் வெளிவந்த தோற்றத்துக்கும் பெரும் வித்தியாசம் இருந்தது, கூட்டம் வாய்பிளந்து அலறியது.

அந்தணர்கள் தலை அசைத்தபடி சிவனை வணங்கிவிட்டு அவன் அருகே சென்றனர்.

ஆம், காலில் தண்டயம் காதில் வளையம் கருத்த உடல், கலைந்த கேசம், சவரம் செய்யா முகம், இறுகிய உடல்கட்டு என புலையர் அடையாளத்தோடு தீயில் இறங்கிய நந்தன் வெளிவரும் பொழுது மிக மிக ஜொலிக்கும் தேஜஸில், முப்புரி எனும் பூனூல் அணிந்தபடி நெற்றியெங்கும் நீறு இருக்க தலையில் குடுமி வைத்தபடி முழு அந்தணனாக வந்திருந்தான்

நெருப்பில் புடம் போட்ட தங்கமென அவன் வெளிவந்து ஜொலித்து கொண்டிருந்தான், அந்தணர்கள் அவரை தங்களில் ஒருவராக கருதி பணிந்து நின்றனர்.

ஆம் அவன் பக்தி வென்றது, நெருப்பு வடிவில் அவனை அணைத்து மாசு நீக்கிய சிவன், நந்தனை நந்தனார் எனும் அடியாராக்கினார்

பின் பூரணகும்ப மரியாதையுடன் மேள தாளங்கள் முழங்க நடராஜர் சந்ததிக்கு அழைத்து செல்லபட்டார் நந்தனார்.

ஆம், அதுவரை ஆலய வாசலே அறியாத அவர். ஆலயத்தின் உள்ளே எப்படி இருக்கும் என்று கூட அறியாத அவர் அன்றுதான் முதல் முறையாக ஆலயத்துள்ளே நடந்தார்.




எந்த கோவிலில் தன்னை உள்ளே விட மாட்டார்கள், தள்ளி இருந்து தரிசித்தாலே புண்ணியம் என நினைத்து நந்தனார் வந்தாரோ, அந்த ஆலயத்தில் இப்பொழுது உச்சபட்ச மரியாதையோடு அவர் அழைத்து செல்லபடுகின்றார்.

சிவனின் திருவிளையாடல் என்பது இதுதான்.

இதற்குத்தான் திருப்புன்கூரில் அதிசயம் செய்து அழைத்து வந்தீரா? என் பெருமானே என மகிழ்ந்து மகிழ்ந்து உருகி சென்ற நந்தனார் நடராஜரை மனமார தரிசித்தார்.

மிக அருகில் சென்று அவரை காண அர்ச்சகரிடம் கோரினார், அவர்களும் அனுமதித்தார்கள்.
தன் தவத்தின் உச்சியில் இருந்த அந்த நந்தனார் அப்படியே உள்சென்று சிவனை பணிந்து நிற்கும் பொழுதே அவரில் கலந்தார், ஆம் மறைந்தே விட்டார்.

தன் உத்தம அடியானை அப்படியே தன்னோடு எடுத்து கொண்டார் சிவன், அவரின் வாழ்வு மட்டும் நாயன்மார் வரலாற்றில் ஒன்றாயிற்று

நந்தனார் ஏன் மறைந்தார்?

அது அக்காலத்தில் இருந்த ஒரு வழமை, காற்றினில் காயத்தை கரைத்தல் என்பார்கள். மிகுந்த பக்தி உள்ள ஒருவனின் உள்ளம் மட்டுமல்ல உடலும் பக்தியால் நிரம்பி இருக்கின்றது.

உன்னதமான பக்தி கொண்டவர்கள் இறைவனோடு கலக்கும் பொழுது அவன் சிந்தை தாங்கிய உடலையும் காற்றில் கரைத்துவிட்டே கலந்துவிடுகின்றார்கள்.

அக்கால ஆண்டாள் முதல் ஏகபட்ட உதாரணம் இப்படி உண்டு என்றாலும் இந்த காலத்தின் மிகபெரிய உதாரணம் ராமலிங்க அடிகளார்.

நந்தனார் வாழ்வில் வரும் மிக முக்கிய சம்பவம், அவர் ஏன் இறைவனை கருவறையில் கண்டதும் காணாமல் போனார் என்பதே.

நதி கடலை கடந்தபின் திரும்பும் அவசியமில்லை, விளைந்த கனி மரத்திலே இருக்க வேண்டிய அவசியமில்லை, முதிர்ந்த ஒன்று தன் நோக்கத்தை அடைந்துவிட்ட ஒன்று மறைவதுதான் இயல்பு.

வெட்டி எடுத்த தங்கம் சுரங்கத்துக்கு திரும்பாது என்பது போல வாழ்வில் இறைவனை அடைவது ஒன்றுதான் லட்சியம் என்றிருந்த நந்தனாருக்கு அதைவிட அடுத்து இவ்வுலகில் வேலை இல்லை.

பக்தர்கள் சிவனில் இரண்டற கலந்து மறைவது என்பது அமரநீதி நாயனார் முதல் பல இடங்களில் காணப்படும் விஷயம்

சரி, ஒருவேளை நந்தனார் அப்படி கலக்காமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? அந்த சன்னதிவிட்டு நகர்ந்திருப்பார்?

நிச்சயம் நகர்ந்திருக்கமாட்டார், இதனால் அவரை தன்னோடு சேர்த்து கொண்டார் சிவன். இதுதான் நந்தனார் வாழ்வில் நடந்தது.
இதில் மர்மமோ மறைக்கபட்ட விஷயம் என்றோ எதுவுமில்லை.
சிவனை சுமந்த காயத்தை (உடலை) காற்றில் கரைத்து, சிவனில் கலக்க போகும் அந்த ஆத்மாவினை தாங்கியிருக்க அந்த உடல்

தேவையில்லை எனும் வகையில் அது காற்றிலே கரைக்கபடும் எனும் அந்த இந்து ஆன்மீக ரகசியப்படி அவர் காற்றிலே மறைந்தார்.

மாணிக்கவாசகர் எனும் அதி உன்னத நாயனாரே நந்தனாரை பற்றி இப்படி சொல்கின்றார்

"ஆ உரித்துத் தின்னும் புலையரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

நந்தன் ஒருமுறைதான் வாழ்வில் கோவிலுக்குள் சென்றார், வெளியே திரும்பாமல் அப்படியே சிவனுடன் ஐக்கியமும் ஆகிவிட்டார்.

"ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
    அவனி தலத்தை ஐம் புலனாய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
    சிவன் எம் பெருமான் என்று ஏத்தி
ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு
    உள்ளே உருகி ஓலம் இட்டுப்
போற்றி நிற்பது என்றுகொல்லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே." (திருவா.பா439)

- அரசனே! என் செதுக்கப்படாத மாணிக்க மணியே!
- இவ்வுலகில் வாழ அடியேன் பொறுக்க மாட்டேன்.
- ஐம்புலன்களாகிய சேற்றில் அமிழ்ந்து விடாதவாறு "சிவன் எம் தலைவன்" என்று புகழ்ந்து,
- மணலில் நீர் ஊறுவது போல உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருகி, ஓலமிட,
- உன்னை வணங்கி நிற்பது எப்போது?

தன்னை அறிந்தால் கடவுளை அறியலாம் – வேதாத்திரியம்

“உன்னையோ கடவுளையோ அறிய வென்றால்,
ஒருகுறுக்கு வழியுண்டு. உள்ளுணர்ந்து
தன்னையறிந் தந்நிலையில் நிலைத்து வாழும்
தனிக்கருணை வடிவான குரு வடைந்தால்,
அன்னை வயிற்றடைந்து உருவாய் உடலாய்வந்த
ஆதி குருவைப் புருவத்திடை உணர்த்தப்
பிள்ளை நீ அவ்விடத்தில் நிலைக்க, உந்தன்
பேதமற்ற நிலை, கடவுளாகி நிற்கும்.” (ஞாக.பா.1459)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

## 3.இறைவனுடன் கலந்த ஆண்டாள்

ஒரு நாள் தோட்டத்தில் பூ பறிக்க சென்றபோது, குழந்தை ஒன்றை(ஆண்டாள்) துளசிச் செடியின் கீழ் கண்டெடுத்தார்.

ஆயர் குல பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு இட்ட பெயர் கோதை.

இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராயும், தமிழில் நல்ல திறமை கொண்டவராகவும் இருந்தார்.

சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக்கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார்.



கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாக தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர் திரும்பவும் கொண்டுபோய் வைத்து வந்தார்.

இதனால் கோதை சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருநாள் இதனை அறிந்து கொண்ட விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார்.

அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டுப் புதிய மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார்.

அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றி கோதை சூடிய மாலைகளே தனக்குப் உகந்தவை எனவும், அவற்றையே தனக்குச் சூடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதனாலேயே “சூடிக்கொடுத்த சுடர்க்கொடி” என்றும், இறைவனையே ஆண்டவள் என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார்.

கோதை மண வயதடைந்த பின்னர் அவளுக்காக செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோயிலில் உள்ள இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தார்.

என்ன செய்வதென்று அறியாது கவலையுடனிருந்த விஷ்ணு சித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை

மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்து வருமாறு பணித்தார்.

குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள்.
இதுவே ஆண்டாள் வரலாறு ஆகும்.

மேலும் ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார்.
இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமைக்கும், தத்துவம்,பக்தி ஆகியவற்றிக்காக மிகுந்து போற்றப்படுகின்றது.

இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது.

ஆண்டாளைப் போல் மாணிக்கவாசகரும் “ தன்னையே எனக்குத் தந்தவனை, பொருந்தி இருப்பது எப்போது?” என்று திருவாசகத்தில் பாடுகிறார்.

“நீண்டமாலும் அயனும் வெருவ
    நீண்ட நெருப்பை விருப்பு இலேனை
ஆண்டுகொண்ட என்ஆர் அமுதை
    அள்ளூறு உள்ளத்து அடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
    விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்ப து என்று கொல்லோ என்
    பொல்லா மணியைப் புணர்ந்தே”    (திருவா.பா440).

- என் செதுக்கப்படாத மாணிக்க மணியை,
- நெடிய திருமாலும் பிரம்மனும்அஞ்சுமாறு உயர்ந்த நெருப்புத் தம்பமாய் நின்றவனை,
- என் மீது ஒரு சிறிதும் விருப்பம் இல்லாதவனை,
- இருப்பினும் என்னை ஆட்கொண்ட அரிய அமுதை,

- மிகுதியும் இன்பம் ஊற நிற்கும் அன்பர் முன்னே,
- வேண்டும் அளவும் வாய்விட்டு அரற்றி,
- மனம் பொருந்திய மலர்களைத் திருவடிகளில் தூவி,
- பொருந்தி நிற்பது எப்போது?

## உச்சிக்குள் அமர்ந்த உயர் வாழ்வு - வேதாத்திரியம்

"ஊன் கொண்ட தேகத்திலே உச்சிமலை மீதினிலே
நான் கண்ட நடனமதை நண்பர்களே சொல்லுகிறேன்!
மான் கண்ட வேகத்திலே மருளுகின்ற நடையது போல்,
நான் கண்ட நடனமதை, நண்பர்களே சொல்லுகிறேன்"
(ஞாக.பா.1477)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

# 4.இசையால் ராமனுடன் கலந்தவர்

இசைக்கலையில் உச்சநிலையாக கர்நாடக சங்கீதம் விளங்குகிறது. கர்நாடக சங்கீதத்தின் மூலம் இறை வழிபாட்டில் சிறப்புத் தன்மையை ஆழ்வார்கள், நாயன்மார்கள்,

அருணகிரிநாதர், புரந்தரதாசர், மீராபாய், கபீர்தாஸ், குருநானக் போன்ற மகான்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களை நாதயோகிகள் என்பார்கள்.

இவர்களுள் முதன்மையானவர் என போற்றப்படுபவர் சங்கீத ஜோதி, சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள். 1767 முதல் 1848 வரை உள்ள 80

ஆண்டுகளை ‘தியாகராஜ சாகாப்தம்’ என்று அழைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

திருவாரூரில் ராமபிரும்மம் என்பவருக்கும், சாந்தா தேவியாருக்கும் மூன்றாவது குழந்தையாக பிறந்தார் தியாகராஜர். இவர்கள் மூலகநாடு- திரைலிங்க தெலுங்கு பிராமணர் வகுப்பை சேர்ந்தவர்கள்.

இவருக்கு ஜப்யேசன், ராமநாதன் என்ற சகோதரர்கள் இருந்தனர். இவரது தந்தை சிவ, விஷ்ணு பக்தியில் ஈடுபட்டு, திவ்யநாத பஜனை செய்து வந்தார்.

திருவாரூரில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தியாகராஜர் தனது ஆரம்பக் கல்வியை பயின்றார்.

பிறகு பெற்றோருடன் திருவையாறு சென்றுவிட்டார். 8-ம் வயதில் உபநயனம் செய்வித்தபோது, காயத்ரியுடன், ராமதாரக மந்திரத்தையும் தன் தந்தையிடம் உபதேசம் பெற்றார். தன் தந்தை வைத்திருந்த ராமவிக்ரகத்திற்கு அன்றுமுதல் பூஜை செய்ய ஆரம்பித்தார்.



ராமகிருஷ்ணானந்தரிடம் உபதேசம் பெற்ற ராம சடாட்சரி மந்திரத்தை லட்சக்கணக்கில் ஜபம் செய்தார்.

இவரது தந்தையார் பரமபாகவதர். சங்கீதம் அவரது ரத்தத்தில் ஊறி இருந்தது. சிறு வயதிலேயே தியாகராஜரும் இசைத்திறமை கொண்டவராக விளங்கினார்.

இனிமையான குரலும் கைகொடுத்தது. தன் தாயாரிடம் ராமதாசர் மற்றும் புரந்தரதாசரின் கீர்த்தனைகளை கற்றார்.

திருவையாற்றில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் ராமாயணம் படித்தார். வால்மீகி ராமாயணத்தை படிக்கப்படிக்க, ராமபக்தியில் மூழ்கி, ராம சைதன்யர் ஆனார். ஜோதிடமும் கற்றார்.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி சங்கீதத்தில் ஈடுபாடு உள்ளவர். அவரது அரசசபை வித்வானான ஸொண்டி வெங்கட ரமணய்யாவிடம் தியாகராஜர் சங்கீதம் கற்றார்.

அரசசபையில் பல பாட்டுக்களை பாடி பாராட்டு பெற்றார். அவர் பாடிய முதல் பாட்டு நமோ நமோ ராகவாய அதிசம் என்பதாகும்.

தியாகராஜர் தினமும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ராம நாமம் சொல்லி 38ம் வயதிற்குள் 96 கோடி ராம ஜபம் உருவேற்றினார்.

தனது 38ம் வயதின் கடைசி நாளில் உள்ளம் உருகி ஸ்ரீ ராமனை பாடும்போது கதவு தட்டிய சப்தம் கேட்டது.

திறந்து பார்த்தபோது ராம லட்சுமணர்கள் விஸ்வாமித்திரர் நடத்திய யாகத்திற்கு செல்வது போன்ற காட்சியை கண்டார்.

அப்போது பாடியதுதான் 'ஏல நீ தயராது' என்று புகழ் பெற்ற பாடல். தியாகராஜர் முதலில் பார்வதி அம்மையாரை மணந்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இறந்துவிட்டதால், அவரது தங்கையான கமலாம்பாள் என்ற உத்தமியை மணந்தார்.

இவர்களுக்கு சீதாலட்சுமி என்ற பெண் பிறந்தார். தியாகராஜரின் தந்தை இறக்கும் தறுவாயில் மகனை அருகில் அழைத்து, ஸ்ரீ ராமமூர்த்தியை எப்போதும் பாடு என்று கட்டளையிட்டார். தந்தை இறந்தபிறகு தியாகராஜரின் சகோதரர்களுக்கு தம்பியின் பாட்டும் பக்தியும் பைத்தியக்காதரத்தனமாக தோன்றவே, அவரை ஊர் கோடியில் இருந்த கூரை வீட்டிற்கு அனுப்பிவிட்டனர் சொத்துக்களை அவர்களே எடுத்துக் கொண்டனர்.

தியாகராஜர் தனது தந்தை பூஜை செய்த ராம விக்ரகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, அந்த சிறிய வீட்டில் ராமனை கொலுவிருக்கச் செய்தார்.

சதா ராம நாமமும், ராம கானமுமாகவே வாழ்ந்து வந்தார். தினமும் உஞ்சவிருத்தி செய்து, அதில் வரும் வருமானத்தைக் கொண்டு ஜீவித்து வந்தார்.

பல சீடர்கள் அவரிடம் சங்கீதம் கற்றுக் கொண்டனர். யாரிடமும் எதுவும் அவர் பெற்றுக் கொண்டதில்லை.

தனது சீடர்களுடன் ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி ஆகிய நாட்களைக் கொண்டாடுவார். ஒரு சமயம் ஒரு சிஷ்யன் தவறு செய்த போது, அவனை கோபித்து க் கொண்டார்.

ஆனால் அவரது மனைவியோ கோபத்தினால் ஏற்படும் தீமையை எடுத்துக் கூறி சாந்தப்படுத்தினார். அப்போது தன் தவறை உணர்ந்து அவர் பாடிய பாட்டு தான் 'சாந்தமுலேக சவுக்கியமுலேது' (சாந்தம் இல்லாமல் சவுக்கியம் இல்லை).

முதலில் ராமனை மட்டுமே பாடி வந்த தியாகராஜர், சிவபக்தையான அவரது மனைவியின் அறிவுரையை ஏற்று, மற்ற தெய்வங்களைப் பற்றியும் பாடலானார்.

'சம்போ மஹாதேவ, சிவேபாஹிமாம் என்ற பாடல்கள் அதற்கு உதாரணமாகும்.

தியாகராஜரின் மகிமையும், கானச்சிறப்பும் நாடெங்கும் பரவியது. பலர் அவரை புகழ்ந்தாலும், பொறாமைக்காரர்களான அவரது சகோதரர்களுக்கு, அவர் புகழும், பெருமையும் பெறுவது சங்கடத்தைக் கொடுத்தது.

மூத்த சகோதரர் ஜப்பேசயன் அவர் எழுதிய பாட்டு புத்தகங்களை தீயிட்டு கொளுத்தி விட்டார். ஏராளமான கீர்த்தனைகள் அதனால் மறைந்துவிட்டன.

அவரது வீட்டிற்குள் புகுந்து ராம விக்ரகத்தை திருடிக்கொண்டு போய் காவிரியில் போட்டுவிட்டார். ராம விக்ரகத்தை காணாமல் தியாகராஜர் திகைத்து உள்ளம் உருகி அற்புதமான கீர்த்தனங்களால், ஸ்ரீ ராமனிடமே தன் வருத்தத்தை முறையிட்டார். ‘அநியாய முஸேயகுரா ரானிது ராது’ என்ற பாடல் அப்போது பாடப்பட்டது. அன்ன பானம் இல்லாமல் உறங்காமல் துடித்தார்.

ஒருநாள் கனவில் ஸ்ரீராமன் தோன்றி ஆற்று மணலில் தான் புதைந்திருக்கும் இடத்தை சொல்லி மறைந்தார். விக்ரகம் கிடைத்த ஆனந்தத்தில், தொரிகிதிவோ (நீ எப்படித்தான் மீண்டும் கிடைத்தாயோ) ரகுவீர, ரணதீர என்ற பாடல்களால் ராமனை ஆராதித்தார்.

சரபோஜி மன்னர் தன்னை புகழ்ந்து பாட வேண்டும் என நிறைய பணத்துடன் ஒரு அதிகாரியை அனுப்பினார். அரசரின் அழைப்பை நிராகரித்து இறைவனைத் தவிர வேறு யாரையும் பாடமாட்டேன் என சொல்லி அவர்பாடிய சிறப்பான பாடல்தான் ‘நிதிசால சுகமா? ராமுனி சந்நிதி ஸேவசுகமா? என்பதாகும்.

பிறகு சரபோஜி மன்னர் மாறுவேடத்தில் வந்து மற்றவர்களுடன் அமர்ந்து அவரது பாட்டைக் கேட்டு மகிழ்ந்தார். திருவிதாங்கூர் மன்னரான சுவாதி திருநாள் மகாராஜா தியாகராஜரை அழைத்தும் செல்ல மறுத்து விட்டார்.

பின்பு தியாகராஜர் திருப்பதி, காஞ்சி, மதுரை ஆகிய சேத்திரங்களுக்கு சென்று பாடினார். திருப்பதியில் திரை போட்டு மறைந்திருந்த பெருமாளைப்பற்றி ஒரு பெண்ணின் கணவனை கீர்த்தனை பாடி உயிர்பெறச் செய்தார்.

மனைவி இறந்தவுடன் பற்றற்ற துறவியாக வாழ்ந்த தியாகராஜர் பகுளபஞ்சமி தினத்தன்று (1848) பஜனை பாட்டுகளை கேட்டுக்கொண்டே நாதஜோதியாக மாறி இறைவனுடன் கலந்தார்.

அவர் சொல்லியபடி 60 ஆண்டுகள் கழித்து அவரது கீர்த்தனைகள் புகழ்பெற்றன.

1925ம் ஆண்டு பெங்களூரைச் சேர்ந்த நாகம்மாள் என்பவர் தியாகராஜருக்காக திருவையாற்றில் கட்டிய சமாதியில் இன்றும் தியாகராஜ ஆராதனை ஒரு தூய கலைவிழாவாக சிறப்புடன் நடக்கிறது.

இசையின் நோக்கம் பக்தியை வளர்க்கவே என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியவர் சத்குரு தியாகராஜ சுவாமிகள்.

"அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே." (திருவா.பா441)

- அக இதழிகளைக் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனும், திருமாலும், மற்றவர்களும், இந்திரனும்,சொல்லிப் போற்றும் பல திருப்பெயர்கள் கொண்டவனை.
- சொல் அளவையும், பொருள் அளவையும் கடந்து நிற்கும் பேரொளி ஆனவனை,
- நெல்லிக்கனியை.
- தேனை.
- பாலை.
- பூரணத்துவம் உடைய அமுதை,
- அமுதின் இனிய சுவையை,
- என் செதுக்கப்படாத மாணிக்க மணியை.

பொருந்தி இருப்பது எப்போது?

## அகத்தவத்தில் துரியாதீதம் – வேதாத்திரியம்

"விழிப்புநிலை என்ற அருள் வெளிச்சம் கொண்டு
விருப்பு வெறுப்பெனும் சுழலில் அலை மனத்தின்
அழுக்கற, தற்சோதனையில் முனைந்திடுங்கள்.
அன்பூற்றால் கடமையுணர் வாகும் வாழ்வு.
பழுத்துவிடும் அறிவந்தப் பக்குவத்தால்,
பரத்தோடு உயிர் ஒன்றும் துரியாதீத
முழுத்தவமோ, பிறப்பு இறப்புச் சக்கரத்தை
முறிந்துவிடும். மெய்விளங்கி, முழுமையாவீர்,"
(ஞாக.பா.1498)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.

# 5.உயிரில் மனமடங்க

பூமிப்பிராட்டியின் வடிவமான ஆண்டாளை சீராட்டி, பாராட்டி. கண்ணும், கருத்துமாய் வளர்க்கும் ஒப்பற்ற பெரும்பேறு பெற்றவர் விஷ்ணுசித்தர்.

அனுதினமும் அரங்கனுக்காக புத்தம் புதிய, நறுமணம் கமழும் பல வகையான மலர்களைக் கொய்து, அழகிய பெரிய மாலைகளாகத் தொடுத்து எம்பெருமனுக்குச் சாத்துவதை கைங்கர்யமாகச் செய்து கொண்டிருப்பவர்.

அவ்வாறு மலர் மாலைகளைத் தொடுக்கும் போது தன் அன்பு மகள் கோதையிடம், அரங்கனின் திருவிளையாடல்களை கதைகளாக அவளது நெஞ்சில் பதியும் வண்ணம் கூறிக் கொண்டே தொடுப்பது விஷ்ணு சித்தரின் வழக்கம் ஆகும்.



அக்கதைகளை கேட்கக் கேட்க, கோதையின் மனதில் அரங்கனின் நினைவு பசுமரத்தாணிபோல பதிய ஆரம்பித்தது.

அவள் வளர வளர, ஓங்கி உலகளந்த உத்தமனின் மீது கொண்ட அன்பு என்னும் விதை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருட்சமாக வளரத் தொடங்கியது.

அரங்கனின் மேல்கொண்ட அன்பானது ஆண்டாளை முழுமையாக ஆக்கிரமித்தது. சாதாரண மானிடர் போல உடலால், உணர்ச்சியால் இல்லாது, ஞானம், வைராக்கியம், பக்தி போன்றவற்றால் நன்கு முதிர்ந்து வளர்ந்து வந்தது.

அரங்கனுக்குத் தொடுத்த மாலைகளை, தான் சூடி, அகமகிழ்ந்து, அதரத்தில் புன்னகை தவழ, அழகுப் பார்த்தாள்.

இறைவனுக்காக தொடுக்கப்பட்ட பூமாலைகளைச் சூடி மகிழ்ந்தவள், பின்னாளில் இறைவனுக்காகப் பல பாமாலைகளை உள்ளன்போடு, அருளியவள். 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்னும் இரண்டும் தேனினும் இனிய சுவை மிக்கப் பாமாலைகளாகத் திகழ்கின்றன.

பலப் பல திருப்பெயர்களால் பரந்தாமனைப் போற்றிப் பாடும் ஆண்டாள், எப்போதும் கண்ணனின் நினைவாகவே இருந்தாள்.

எப்போதும் கொஞ்சும் விழிகளை உடைய, நீலநிறக் கண்ணனின் நினைவாகவே இருந்ததால், ஆண்டாளுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் திருவாய்ப்பாடியாகவும், அவளின் தோழிமார்கள் கோபியர்களாகவும், வடபெருங்கோயிலுடையான் திருக்கோயிலே நந்தகோபாலனுடைய திருமாளிகையாகவும் விளங்கியது. ஆலிலைப்பள்ளியானாகிய எம்பெருமானே கண்ணனாக காட்சி நல்குவதாகத் தோன்றியது.

இத்தகைய காரணங்களால் திருப்பாவையைப் பாடி தன் உறுதியான விருப்பத்தை, வைராக்கியமாக்கி நிறைவேற்றிக் கொண்டாள். இப்படித்தான் திருப்பாவை பிறந்தது என்று சில வைணவப் பெரியோர்களும், உரையாசிரியர்களும் கூறுகின்றனர்.

'மானிடவர்க்கென்று பேச்சுப்படில்

வாழகில்லேன் கண்டாய்.'

என்று தன் உடல், பொருள், ஆவி யாவும் பகவானுக்குச் சமர்பிக்கப்பட வேண்டிய அவியுணவே என்பதாக, தனது நாச்சியார் திருமொழியில், தெளிவாக மனஉறுதியுடன் தெரிவிக்கிறாள்.

தனது உள்ளம் என்றுமே திருவரங்கனின் திருமலர்கரங்களைக் கைப்பிடிக்க, கனாக்கண்டு காத்துக் கொண்டிருப்பதாக நினைத்து ஏங்குகிறாள்.

எனவேதான் அனைத்திலும் சிறந்த மாதமான மார்கழியில், முழுநிலவு தினத்தன்று நோன்பினைத் தொடங்கி, இறைவனைப் பாடி இறையருளைப் பெற்றதாக ஆண்டாள் வாழ்வின் வழியாகவும், வாக்கின் மூலமாகவும் அறிய முடிகிறது.

ஆண்டவனையே ஆள நினைத்து, ஆண்டதால் 'ஆண்டாள்' என்றும், இவள் சூடிக்கொடுத்த மாலைகளையே அரங்கன் விரும்பி அணிவதால் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும், இறைவனைக் குறித்து நாச்சியார் திருமொழி இயற்றியதால் 'கோதிலாக் கோதை நாச்சியார்' என்றெல்லாம் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுபவள் பக்தி நெறி ஒழுகிய ஆண்டாள்.

'திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே

திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே

பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே

ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே

உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே

மருவாரும் திருவல்லி வள நாடி வாழியே

வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே'

என்று கோதை நாச்சியாராகிய ஆண்டாளை வாழ்த்தி வணங்குகிறது வைணவ உலகம். நாமெல்லாம் உய்யும்படி நல்வழி காட்டிய கோதை நாச்சியாரின் திருவடிகளைப் போற்றுவோம்.

திகழத் திகழும் அடியும் முடியுங்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
திகழப் பணிகொண் டு என்னை ஆட்கொண்டு
ஆவா என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே." (442)

- திருமாலை கிழே ஆழ்ந்து சென்றும்,
- பிரம்மா மேலே பறந்து சென்றும்,
- காண முடியாத மிகவும் விரிந்த தன்மையுடன் விளங்கும் அடியையும் முடியையும் உடைய அப்பெரியோனை.
- என் செதுக்கப்படாத மாணிக்க மணியை,
- இந்நிலவுலகம் முழுவதும் செய்தி பரவுமாறு என்னை ஏவல் செய்து, ஆட்கொண்டவனை,
- வியந்து. போற்றி, புகழ்ந்து, நிற்பது எப்போது?

உயிரில் மனமடங்க – வேதாத்திரியம்

"ஐந்து புலன்களையும் அடக்கி, புருவத்திடை
அறிவினது மூலத்தை ஆழ்ந்துநோக்கி அமர,
சிந்தை அடங்கிவிடும் சீவனே சீவனாகும்.
சிறுகச் சிறுகப் பயின்றால், சித்திக்கும் உண்மைநெறி"
(ஞாக.பா.1463)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

## 6. இறைவனுடன் கலந்த காரைக்கால் அம்மையார்

புனிதவதி என்பது காரைக்கால் அம்மையாருக்கு அவரது பெற்றோர் வைத்த பெயர். சிவபக்தியில் தோய்ந்து வாழும் புனிதவதி, பரமதத்தனை மணக்கிறார்.

அவன் மதிய வேளையில் பணியாள் மூலம் கொடுத்தனுப்பிய இரு மாங் கனிகளை வீட்டில் வாங்கி வைக்கிறார்.

அமுது தயாரிக்கும் முன் ஒரு சிவனடியார் வர, அவருக்கு எதை இடுவது என யோசித்து ஒரு மாங்கனியை பக்தியுடன் அவனது திருவோட்டில் இடுகிறார். அவர் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் செல்கிறார்.

பின்னர் தன் கடையில் பணி முடித்து உணவுண்ண இல்லத்திற்கு வருகிறான் பரமதத்தன். ஒரு மாங்கனியைக் கணவருக்குப் பரிமாறுகிறார் புனிதவதி.

மேலும் ஒரு மாங்கனி அனுப்பினேனே, அதையும் கொண்டுவா என்கிறான் அவன்.

என்ன செய்வாள் புனிதவதி? சிவனே என்றிராமல் சிவனை பக்தியுடன் வேண்டுகிறாள் அந்த பக்தை. உள்ளம் உருக வேண்டிய பின்னும் அருளாவிட்டால் பிறகு கடவுள் எதற்கு? இறையருளால் கையில் தோன்றுகிறது ஒரு கனி.

அதன் வரலாறு அறியாமல் அதை உண்ட கணவன் அதிசயிக்கிறான். அத்தகைய சுவையுள்ள மாங்கனியை அவன் தன் வாழ்நாளில் உண்டதே இல்லை! இது ஏது என வினவ சிவனருள் தந்த கனி என உண்மையைச் சொல்கிறாள் புனிதவதி.

அப்படியானால் இன்னொன்று கொண்டுவா என்கிறான் கணவன். இன்னொன்றையும் சிவன் அருள, அதையும் கணவனுக்குப் படைக்கிறாள் புனிதவதி.

கணவன் கையில் அது வந்ததும் அவன் கண்முன்னே அது சடாரெனக் காற்றில் மறைகிறது!

திகைத்த கணவன் இவள் சாதாரணப் பெண்ணல்ல என அறிந்து கொள்கிறான். அவளிடம் ஏதொன்றும் சொல்லாமல் அவளை விட்டுப் பிரிகிறான். இன்னொரு பெண்ணை மணந்து தனக்கு அந்தப் பெண்ணால் பிறந்த மகளுக்குப் புனிதவதியின் பெயரைச் சூட்டுகிறான்.

சில ஆண்டுகள் கழித்து விவரமறிந்து உறவினர்கள் புனிதவதியைக் கணவனிடம் கொண்டு சேர்க்கிறார்கள். ஆனால், கணவனோ தனது புதிய குடும்பத்தோடு அவள் காலில் விழுந்து பணிகிறான்!

உறவுக் கூட்டம் திகைக்கிறது. புனிதவதி கணவனின் மனநிலை கண்டு, தனக்கு இனி அழகெல்லாம் எதற்கு எனச் சிந்திக்கிறாள். சதைப்பற்றுள்ள மாங்கனியை இறைவனிடம் பெற்ற அவள், தன் உடலின் சதைமேல் உள்ள பற்றை முற்றாக விடுகிறாள்.

சிவனிடம், உடலில் சதையே இல்லாத எலும்புரு வேண்டிப் பெறுகிறாள். அவளைக் காரைக்கால் அம்மையே எனப் போற்றித் துதித்து அச்சத்தோடு விலகுகின்றனர் உற்றாரும் ஊராரும். காரைக்கால் அம்மையார் கயிலையங்கிரி நோக்கி நடக்கிறார்.

இமயம் சிவன் உறையும் இடமல்லவா, அதை எவ்விதம் காலால் மிதிப்பது என இமயத்தில் தலையாலேயே நடந்து செல்கிறார்.

எலும்புருவோடு தலைகீழாய் நடந்துவரும் இவர் யார் என வியப்போடு கேட்கிறாள் பார்வதிதேவி. `என் அன்னை இவர் எனச் சொல்லி மகிழ்கிறான் பரமசிவன்.

இப்போது தன்னைப் பெற்ற தாய் இல்லாவிட்டாலும், ஒரு தாயைத் தனக்காகப் பெற்றுவிட்டான் பரமன்!

தாயுமிலி, தந்தையிலி, தான்தனியன் ஆன சிவன், காரைக்கால் அம்மையாரை அம்மையே என அழைத்து என்ன வரம் வேண்டும் என உள்ளன்போடு வினவுகிறான்.

காரைக்கால் அம்மையார் ஆழ்மனத்தில் இனியொரு பிறவி வேண்டாம், இனி இடும் - பை வேண்டாம் என்ற சிந்தனையே ஓடிக்கொண்டிருக்கிறது. அம்மை பரமனிடம் வேண்டுகிறார்:

இறவாத அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ்இருக்க
என்றார்'

என்கிறது சேக்கிழார் எழுதிய பெரியபுராணம். பிறவாமையே மனிதப் பிறவிகளின் இலக்கு. இடும் - பை இனி நமக்கு இல்லாதிருக்க வேண்டும் என்பதே நம் ஆன்மிகத்தின் குறிக்கோள்.

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற்கு அருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமால் உற்றேன் என்றறு என்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்த அன்பாய்ப்

புரிந்து நிற்பது என்று கொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே” (443).

- என் செதுக்கப்படாத மணியே!
- என்மீது இரக்கம் கொண்டு, குருவாக வந்து. பேரனிபம் தந்து,
- அடியேனுக்கு முன்னமே அருள் செய்தாள்.
- இப்பொழுது உன்னைப் பிரிந்து, இந்நிலவுலகில் தெளிவதற்கு அரிச மயக்கம் அடைந்தேன்.
- கண்களில் நீர் பெருகவும்,
- உள்ளம் உருகவும்,
- மெம்மயிர் சிலிர்ப்பவும், ஆக மகிழ்ந்து.
- அன்பு கொண்டு,
- உன் திருவடியைப் பொருந்தி நிற்பது எப்போது?

## தேர்ந்த வழியில் ஆன்மீக சாதனை செய்ய வேண்டும்.

“மூச்சுப் பயிற்சியினால் உடல்நலம்
காக்கலாம், முறையாய்ச் செய்தால்.
முழுதுணர்ந்த குருமூலம் இக்கலையைக் கற்ற
அளவாய்ப் பயில வேண்டும்.

பேச்சுப் பிழையில்லா மந்திரங்கள்
உண்டவற்றைப் பிழையாய்ச் சொன்னால்
பெறவிரும்பும் பயன் கிட்டா. சிக்கல்
பல வாழ்வில் எழும். பிழை செய்யாதீர்!

பாச்சுவதும் நிறுத்துவதும் உயிர்க்காற்றைப் பின்
வெளிவிடலும் எளிது அல்ல.
பலகோடி உடல் செல்கள், உயிர் காந்தம்
மன இயல்புக்கு எதிர் மாறான

நீச்சல் அறிவின்மையாம். கற்பனை,
பேராசையாம். நினைவாய்க் கூர்ந்து

நீங்கள் வேண்டுவதென்ன? நேர்முறை
கண்டதனைப் பழகுவீர்," (ஞாக.பா.1448)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

## 7. நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்

**"கடவுளை நேசிக்க வேண்டும்**, அதுதான் விஷயம் . ஒரு தாய் தன் குழந்தையை நேசிப்பது போ ல் , மனைவி கணவனை நேசிப்பது போல், உலக இன்பங்கள், பொருட்களை நேசிப்பது போல் கடவுளை நேசிக்க வேண்டும்

இந்த மூன்று நபர்களின் நேசமும், இந்த மூன்று கவர்ச்சியின் (ஈர்ப்பு) ஒன்று சேர்த்தால் எவ்வளோ அன்பு உனது இதயத்தில் இருந்து பெருகுமோ ... அவ்ளோ அன்பையும் நேசத்தையும் இறைவனிடம் செலுத்த முடியுமானால், சத்தியமாக அவரைக் காண முடியும்".

**"மன ஏக்கத்துடன் அவரை அழைப்பது அவசியம்**. ஒரு பூனைக்குட்டி தன் தாயை அழைக்க மட்டும் அறிந்திருக்கிறது . தாய்ப்பூனை அதனை எங்கே வைக்கிறதோ அங்கேயே இருக்கிறது .

சிலசமயம் வீட்டில் உள்ள பல இடங்களில் மறைவான இடங்களில் குட்டியை வைத்துவிட்டு சென்றுவிடும். ஏதாவது அந்த குட்டிக்கு துன்பம் ஏற்பட்டால், குட்டியால் கத்தி அழைக்க மட்டுமே தெரியும் மற்ற எதுவும் தெரியாது.

தாய்ப்பூனை எங்கிருந்தாலும் தன் குட்டியின் ஓசையை கேட்ட அந்த

மறுகணமே ஓடோடி வந்து விடுகிறது". இந்த மாதிரியான ஒரு அன்பு நம் அப்பாவான இறைவன்மேல் வரவேண்டும்.
கடைசியாக, மனம் ஒருங்கிணைந்து தியானத்தில் இறைவனை எண்ணி ஆழ்ந்து பிராத்தனை செய்தால், இறைவன் தானாக உங்களை தேடி காட்சியை தந்தருள்வார்!

தியானம் செய்ய முடியவில்லையே என்று வருந்த வேண்டாம் , ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியதை கடைபிடித்து ஒரு தடவை இறைவனும் நீங்களும் அன்பினால் பலம் பெற்றால் பின் தியானம் தானாக கைகூடும்!

"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சனநீர்,
பூசை கொள்ள வாராய் பராபரமே"
என்று தாயுமானவர் பாடியுள்ளார்.

எனது இதயமே கோயில், உன்னைப் (இறைவன்) பற்றிய நினைவுகளே மலர்கள், உன் மீதான அன்பே மஞ்சனநீர் (அபிஷேகத்திற்கான பால், தேன்). எனவே, இதுபோன்ற பூஜையே என்னால் செய்ய முடியும்; உடனே வருவாய் என் இறைவா என்று வழிபடுகிறார்.

உட்கார்ந்த இடத்தில் இருந்தே இறைவனை அழைக்கும் அளவுக்கு ஆத்ம பலம் சித்தர்களுக்கு இருந்தது.

ஆனால் இதுபோன்ற பலம் மனிதர்களுக்கு வேண்டும். இதற்கான பயிற்சி, முயற்சி, சாதனை செய்வது, தவம் செய்வது போன்ற விளக்கங்களை எலலாம் தாயமானவர் பாடல்களில் நாம் காணலாம்.

**நித்திய பூஜை!!!**

**உள்ளுறையில் என்னாவி நைவேத்யம் ப்ராணன் ஓங்குமதி தூபதீபம் ஒருகாலமன்றிது சதாகால பூசையாய் ஒப்புவித்தேன் பராபரமே"**
**தாயுமானவர்**

- சதா சர்வ காலமும் பூசை நடந்து கொண்டே இருக்க என்ன செய்ய வேண்டும்?

- சதாசர்வ காலமும் பூசை செய்வது இயலுகிற காரியமா? தூங்குவதற்கு நேரம் வேண்டாமா?
- தூக்கத்தில் கனவு வரும், கனவில் பூசை செய்வேன் என்று சொல்ல முடியுமா?
- உறக்கம் என்பது தன்னை மறந்த நிலை. அதில் எப்படி பூசை செய்ய முடியும்?

இயலும் என்கிறார் தாயுமானவர்..

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

- பூசை என்பது இச்சை செயலாக இன்றி அனிச்சை செயலாக வேண்டும்.
- நம் உடலில் சில காரியங்கள் மட்டும் நிற்பதே இல்லை.. இதயம் துடிப்பது. மூச்சு விடுவது..
- உள்ளுறையில்... கோவிலில் கருவறை போல இறைவன் இருக்கும் கருவறை ஆக மனம் மாற வேண்டும்.
- அவனுக்கு நாம் இழுத்து விடும் மூச்சே தூப தீபம் ஆக வேண்டும். ஆக மூச்சைச் சீராக்க வேண்டும்.

ஓங்கும் அதி தூப தீபம். மூச்சுதான் தூப தீபமும். அனைத்து மூச்சும் ஒரே போல் இருப்பதில்லை, சில சமயங்கள் ஆழ்ந்த மூச்சும், சில சமயம் சீரான மூச்சும் சில சமயம் மெல்லிய சுவாசமும் இருக்கும்.

ஒவ்வொரு மூச்சும் ஒவ்வொரு வகை ஆராதனை.. இறை ஆராதனையாக சுவாசம் மாறினால்.. அதை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று புரிகிறதல்லவா?

## தூப தீபம் சரி. நைவேத்யம் என்ன?

படியளக்கிற பெருமானுக்கு அளந்தா கொடுக்கமுடியும். என்ன கொடுத்தாலும் அது அவன் கொடுத்ததே அல்லவா? அவன் கொடுத்ததில் உயர்ந்த ஒன்றை அவனுக்கே படைத்தல் வேண்டுமல்லவா?

அப்படிப்பட்ட ஒன்று நமது உயிர் மாத்திரமே.. நம் உயிரையே அவனுக்கு நைவேத்யமாய் படைப்போம்.

அதன் பொருள் தற்கொலை செய்து கொள்ளுதல் அல்ல. நம் உயிர் அவனுடையதாகும் பொழுது அவன் சேவை மாத்திரமே நம் கடமை ஆகிவிடுகிறது.

இப்படி அவனது சேவை மட்டுமே நம் கடமையாகக் கருதி, அவனை மனதில் இருத்தி, மூச்சுவிடுதலைக் கூட பூசையாகிக் கருதிச் செய்தோமானால் அதுதான் நித்திய / சத்திய பூசை.

அதற்காக தம்மை ஒப்புவிக்கிறார் தாயுமானவர் பெருமான்.

மறுபடி யோசிப்போம்.

இப்படி ஒரு பூசை செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

- மனம் வேறு எண்ணங்கள், வருத்தங்கள் ஆசைகள் இப்படி எதுவும் வந்து அடைந்து போகாமல் சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- சுற்றுப் புறத் தூய்மையும் வேண்டும்.
- நம்மையே நாம் அவனிடம் ஒப்புவித்து விட வேண்டும். வேண்டுதல் எதுவுமே இருக்கக் கூடாது...

மனம் என்ன சொல்கிறதோ அதை மறுபேச்சின்றி செய்தல் வேண்டும். இதுதான் இறைவனை நித்ய பூசை செய்யும் ஒரே வழி.

“கனைப்பொலி செய்து. கண்களில் அருவி போல் நீர் பெருக”
கை கூப்பி வணங்கி இப்பாடலில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.

நினையப் பிறருக்கு அரிய நெருப்பை
 நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப் பாரை இல்லாத தனியை
 நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்

    கையும் கூப்பிக் கடிமலரால்
புனையப் பெறுவகு என்று கொல்லோ என்
    பொல்லா மணியைப் புணர்ந்தே.” (444)

- என் செதுக்கப்படாத மாணிக்கமணி,
- மற்றவவர் நினைத்துப் பார்க்க அருமை உடையவன்.
- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களாக விளங்குபவன்.
- தனக்கு ஒப்புமை இல்லாத தனி முதல்வன்.
- அவனைக் கண்டு. உடல் பூரிக்க,
- தொண்டை தழுதழுக்க,
- கனைப்பொலி செய்து. கண்களில் அருவி போல் நீர் பெருக.
- கை கூப்பி வணங்கி,
- மணமலர்களால் அழகு செய்து,
- பொருந்தி இருப்பது எப்போது?

“கருவறிந்து கருத்தொடுங்கித் தவமிருக்க
    கற்பதற்கு, வயது பதினாறு வேண்டும்.
கருமுதிர்ச்சி அடையாமுன் இதைப் பழக்கக்
    கனல்மீறும் வேகத்தை உடல் தாங்காது.
கருதவத்திற்கு அருகதையாம் அந்நாள் மட்டும்.
    கருத்தை விரித்தொன்றல், ஜெபம், உருவத்தியானம்,
கருமுதிர்ந்தும் கருத்தை விரித்தே வணங்கல்
    கனியிருப்பக் காய்உண்ணும் வகைபோல ஆகும்.”
(ஞாக.பா.1456)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

# 8. நெக்கு நெக்கு உள் உருகி உருகி

**இறைவனைக் காண 6 வழிகள் கூறிய ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

ஆன்மீகத்தில் திளைத்த அனைவருக்கும் இறைவனைக்காண வேண்டும் என்ற ஆசை இருக்கும் ... ஆனால் அது எப்படி சாத்தியம் ? இது உண்மையா? நம்மால் இறைவனை பார்க்க முடியுமா?

என்று பல கேள்விகள் மற்றும் சந்தேகங்களினால் ,மனக்குழப்பத்திற்கு ஆளாகி இறுதியில் முயற்சி செய்யாமல் விட்டுவிடுவோம்!...

இங்கும் ஒரு சீடர் ஒருவருக்கு நம்மை போல இறைவனை எப்படி காணவேண்டும் என்று குருவிடம் கேட்டிருக்கிறார் ...வாருங்கள் நமது ராமகிருஷ்ணரின் பதில் என்ன என்று பார்ப்போம்!

**இறைவனை பார்ப்பது உண்மையா?**

**சீடர்**: “சுவாமி ! இறைவனைக் காண முடியுமா?”

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

‘முடியும் . நிச்சயமாக முடியும் . அதற்கு அவ்வப்போது **தனிமையில் வாழ வேண்டு ம் , பகவானின் திருநாமத்தையும் மகிமைகளையும் பாட வேண்டும்,** பகுத்தறிந்து உணர வேண்டும். இந்த வழிகளையெல்லாம் பின்பற்றவேண்டும்’ .

(அதாவது, யார் வேண்டுமானாலும் இறைவனை காண முடியும் . அதற்கு நாம் நம்மைச்சுற்றி இருக்கின்ற மாயை சூழ்நிலைகளிருந்து விலகி அமைதியான வாழ்க்கையை நமது கடமைகளை செய்துகொண்டே இறைவனுக்காக தொடரவேண்டும்.

இந்நிலையில் நாம் இறைபக்தியில் திளைத்து, அவருக்காக பூசை செய்வது மற்றும் அவரது திருநாமங்களையும் மகிமைகளையும் பாடி மகிழ வேண்டும்

மற்றும் இறைவனை ஆத்மார்த்தமாக பகுத்தறிந்து உணரவேண்டும், இறை நினைப்பில் திளைத்து வாழவேண்டும். என்று கூறுகின்றார்.)

**இறைவனைக்கான எந்நிலை சிறந்தது?**

**சீடர்**: "சுவாமி , எந்த நிலையில் ஒருவன் இறைவனைக் காண முடியும்?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் :

**"ஆழ்ந்த மன ஏக்கத்துடன் அழுதால் அவரைக் காண முடியும்**. மனைவி மக்களுக்காகவும், பணத்திற்காக மக்கள் அழுது புலம்புகிறார்கள். ஆனால் கடவுளுக்காக யார் அழுகிறார்கள்? அதுபோல, இறைவனை எப்படி அழைக்க வேண்டுமோ அப்படி அழைக்க வேண்டும்."

"நாம் எவ்வாறு ஒன்று கிடைக்கவில்லை என்றால் கிடைப்பதற்கு ஏங்கித்த விக்கிறோமோ அதுபோல, **இறைக்காட்சி மன ஏக்கத்திற்கு பிறகு வருகிறது**".

"**மூன்று வித கவர்ச்சிகள்( ஈர்ப்புகள் )(மற்றும் அதனின் அன்பு( பக்தி) ஒன்று சேர்ந்தால் இறைவன் தம்மை காட்டியருள்வார்!**

அது,. உலகியலில், மனிதனுக்கு
வருகின்ற

**1.பொருட்கள்மீதான பற்று ,**
**2 தாய்க்கு தன் குழந்தையிடம் இருக்கும் பாசம்,**
**3. கணவன் மனைவியிடம் உள்ள காதல்**

ஆகிய, இம் மூன்று கவர்சிச்களும் ஒன்றாக சேர்ந்த நிலையில் ஒருவனுக்கு இறைவன் மீது ஏற்பட்டால், இந்தக் கவர்ச்சிகள் வலிமையினால் அவன் இறைவனை பெற முடியும்" .

நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்

நக்கும் அழுதும்  தொழுதும் வாழ்த்தி
  நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
  திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்றுகொல்லோ என்
  பொல்லா மணியைப் புணர்ந்தே.” (445)

- என் செதுக்கப்படாத மாணிக்க மணியே!
- நெகிழ்ந்து நெகிழ்ந்து,
- உருகி உருகி, நின்று, உட்பார்ந்து, படுத்து. எழுந்து, சிரித்து, அழுது, வணங்கி வாழ்த்தி இப்படி பலவிதமாகக் கூத்துக்கள் நிகழ்த்தி.
- செவ்வானம் போன்ற உனது அழகிய திருமேனியை விளக்கமுறக் கண்டு,
- மெய் மிகவும் சிலிர்த்து. உன்னைப் பொருந்தி இருப்பது எப்போது?

## சமாதி நிலை – வேதாத்திரியம்

“உடலியக்கம் நின்றுவிட்ட சவத்தை  மண்ணில்
  உள்புதைத்து, சமாதி என்று பூஜை செய்து,
உடலியக்கம் பெற்றபல பொருள்அழித்து,
  உள அமைதியை இழந்து சோர்ந்தோ ரேனும்,
உடலியக்கம் அறிவியக்கம் பிறப்பு, இறப்பு
  உண்மைகளை அறிந்துபயன் அடைய வென்றால்,
உடலியக்கம் நிற்கும் முன்னே, கருதவத்தால்
  உள்நாடி சமாதிநிலை அறிய வாரீர்!” (ஞாக.பா.1444)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

# 9. இறை வழிபாட்டில் ஏழு படிகள்

இந்த உலகில்  வாழ்க்கையில் மனிதன் சந்திக்கும் உடல் மற்றும் மன வழி துன்பங்களான நோய்கள் மற்றும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள், இவைகளைத் தங்கிக் கொள்ள முடியாமல் இறையை வணங்குிறான். வழிபாட்டில் ஏழு படிகள்.

இந்த உலகியல் வாழ்க்கையில் மனிதனுக்கு எந்த துன்பமும், நோய்களும் சிக்கல்களும் இல்லை என்றால் இறைவனைப் பற்றி நினைக்கும் மனிதர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்.

ஆகையினால், வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் போக்கிக் கொள்ளுவத்றகாகவே ஏதோ ஒரு வகையில் மனிதன் இறைவழிபாட்டைச் செய்து கொண்டிருக்கினறான்.

உணவு, உழைப்பு, ஓய்வு, உடலுறவு மற்றும் எண்ணம் ஆகியவைகளின் அளவும் முறையும் மாறாமலும், அலட்சியம் செய்யாமலும் இயற்கை விதிகளுக்கு இசைந்தும் வாழ்வதே இறை வழிபாட்டின் முதல் படியாகும்.

அடுத்து, இந்த உலகில் மனிதனின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயி ப ப து அவனில் எழும் எண்ணங்கள்தான்.  எண்ணம் இல்லாமல் எதுவுமில்லை. எண்ணத்திற்கு அப்பாலும் ஏதுவும் இல்லை.

.

“எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாக செய்தது இனிப் போதும் பராபரமே..”  (பாராபரம்)

ஆகவே அவனுள் எழும் எண்ணங்களுக்கு காரணம் கண்டு. ஆராய்ந்து வாழ்க்கைக்கு உதவக்கூடிய எண்ணங்களை மனதில் நிறுத்திக் கொண்டு உபயோகமற்ற தீய எண்ணங்களை மனதிலிருந்து வெளியேற்றி விடுவது இறைவழிபாட்டின் இரண்டாவது படியாகும்.

வாழ்க்கையில் ஆசை இல்லாதவனும் பேராசை உள்ளவனும் மனிதனே அல்ல. இந்த உலகில் மனிதன் வாழ்வதற்கு காரணமே அவனில் உள்ள ஆசைகள்தான்.

“ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெலாம் கட்டி ஆளினும், கடல் மீதிலும் ஆணை செலவே நினைப்பர்” (தாயுமானவர்)

என்பது போல், அவ்வாசை பேராசையாக மாறிவிடுவது கூடாது. அவ் வாசைகளினால், இன்ப துன்பம் இரண்டுமே தோன்றும்.

ஆகவே தன்னுள் தோன்றும் ஆசைகளுள் தனக்கு துன்பம் தராத வகையிலும், வாழ்க்கையை உணர்த்தும் வகையிலும் உதவக்கூடிய நல்ல ஆசைகளை வகையறிந்து அவைகளை மட்டுமே நிறைவேற்றிக் கொண்டு தீமை தரக்கூடிய உதவாத ஆசைகளை நிறைவேற்ற முயற்சிக்காதபோது வாழ்வில் உண்டாகும் சிக்கல்களும் துன்பங்களும் விலகி விடுகின்றன.

இவ்வாறு தன்னுள் எழும் ஆசைகனை ஒழு(ங்குபடுத்தி கொள்வது இறைவழிபாட்டின் மூன்றாது படியாகும்.

ஒவ்வொரு உயிரினத்திடமும் சினம் எழுவது இயல்புதான் என்றாலும், மனிதனிடம் உண்டாகும் சினம் அவனது வாழ்க்கையை சிதைத்து விடுகிறது.

சினம் இறக்க கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும்
மனம் இறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே” (பாராபரம் )

மனிதன் சினம் கொள்ளுவதால் இதுவரை உலகில் எவ்வித நன்மையும் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.




ஆகவே தீமையைத் தவிர நன்மையும் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.

ஆகவே தீமையைத் தவிர நன்மை ஏதும் இல்லாத சினத்தை பட்டியலிட்டு, அதற்குக் காரணம் அறிந்து பொறுப்புணர்ந்து சினத்தைத் தவிர்ப்பது இறைவழிபாட்டின் நான்காவது படியாகும்.

அடுத்ததாக மனிதனின் கூடவே இருந்து கொண்டு அவனது வாழ்க்கையை நஞ்சாகக் கெடுப்பது, அவனுள் உள்ள கவலைகள்.

கவலை என்பது ஒரு கற்பனை வலை என்றும் உள்ளத்தின் கொடி நோய் என்றும் அவைகளை மனதில் இருந்து ஒழித்துக் கட்ட வேண்டும்.

எந்த கவலையாக இருந்தாலும் பட்டியலிட்டு அனுபவித்தே தீர்க்க வேண்டியவை, தள்ளிப் போட வேண்டியவை, அலட்சியம் செய்ய வேண்டியவை மற்றும் உடனடியாக தீர்க்க வேண்டியவை என இனம் பிரித்துக் கொண்டு, கவலைகளில் இருந்து விடுபட்டு, மனதை மகிழ்சியில் வைத்துக் கொள்ளுதல் இறைவழிபாட்டின் ஐந்தாவது படியாகும்.

மனிதனின் ஒவ்வொரு செயலிலும் விளைவாக வருவது இறைவனின் தீர்ப்பே என்ற உணர்ந்து, தனக்கும் பிறர்க்கும் துன்பம் பயக்காத வகையில், விழிப்பு நிலையில் இருந்து ஒவ்வொரு செயலையும் ஆற்றுவது இறைவழிபாட்டின் ஆறாவது படியாகும்.

இறுதியாக நான் என்பது யார்? எங்கிருந்து வந்தேன்? இவ்வுலகில் எனது வேலை என்ன? பின எங்கு செல்லப் போகிறேன்?

இறைவன் எவ்வாறு எல்லாவற்றிலும் ஊடுருவி இருக்கிறான்? ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதன் பொருள் என்ன?

உண்மையில் பல மதங்கள் அவசியமா? சகோதரத்துவம் எனபதன் பொருள் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை கண்டு முடிவில் ஒவ்வொரு தோற்றங்களிலும், பொருள்களிலும் ஊடுருவி நிற்பது இறைநிலையே என்பதை அறிந்து, இறைநிலையில் தன்மாற்றத்தில் இறுதியாக மலர்ந்தது மனிதனே என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"உடலாய் உயிராய் உலகம் அது ஆகி
கடலாய் கார்முகில்நீர் வாழி வான்ஆய்
இடையாய் உலப்பு இலி, எங்கும்தான் ஆகி
தடையார்பெருவழி அண்ணல் நின்றானே."
எனத் திருமந்திரம் சொல்கிறது.

- இறைநிலையை உணராது,
- அனைத்தும் அதன் தன்மாற்றமே என்பதையும் உணராது,
- சக மனிதர்களுக்கு ஒத்தும் உதவியும் வாழாது,
- எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைக்காது,
- தன் செயல்களை திருத்தம் செய்யாது,
- அங்கும் இங்கும் ஓடி பற்பல வடிவில் பற்பல நாமங்களில் பலப்பலப் படைத்து

இறைவணக்கம் செய்பவர்கள் இன்று ஏராளமாக உள்ளனர்.

அவர்களது இறை வணக்கத்திலும் ஓரளவு நன்மை இருக்கலாம். எனினும் அந்த நன்மையை விட அவர்களின் அறியாமையால் அவர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் தீமைகளே மிகமிக அதிகம்.

தீமைகளற்ற இறைவணக்கமே நாம் இங்கு கூறிய தா மா ன வருடைய வழிமுறைகள்.

தெய்வத்தை அகத்தில் உணர்ந்து (நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்) செயலால் நம்மையும் உயர்த்தி, நாம் சார்ந்த சமுதாயததையும் உயர்த்துவதே தாயுமானவரின் இறைவழிபாடு.

இறைவழிபாடு ஒன்றே ஆன்மாவை உயர்நெறியிலும் நன்னெறியிலும் செயல்படுத்திப் பயிற்றுவித்து உய்விக்கின்றது.

மன ஒருமைப்பாட்டுடன், வழிபாடு செய்யும் போது உள்ளமும் உடலும் தூய்மை அடைகின்றது. இறைவழிபாட்டினால் ஐம்பொறிகளும் அதனதன் படைப்பின் பயனைப் பெறுகின்றன.

பரம்பொருளாகிய அருள்வெளியை (சிவனை) தம்முள் பதித்த தாயுமானவர்,

- இறை அருளுக்காக ஏங்குதல்,
- பேரின்பத்தில் திளைத்தல்,
- அகங்குழைந்து வழிபடுதல்,
- இறையருளோடு கலத்தல்,

இறையன்பிலே உறுதி முதலான இறைவழிபாட்டு முறைகளால் மனம் ஒன்றி ஒருமைப்பாட்டு நிலையில் பேரானந்தம் துய்த்தவராக மாணிக்கவாசகர் விளங்கியதை போல் --- நாமும்--- மாணிக்கவசாகர் வழியில் இறைவழிபாட்டை பின்பற்றுவோமாக!

“தாதாய் மூவேழு உலகுக்கும்
  தாயே நாயேன் தனைஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
   பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே என்று என்று ஏத்தி
   இரவும் பகலும் எழிலார் பாதப்
போது ஆய்ந்து அணைவது என்று கொல்லோஎன்
   பொல்லா மணியைப் புணர்ந்தே.” (446)

- என் செதுக்கப்படாத மாணிக்கமே!
- மேல் எழு, கீழ் ஏழு, நடு ஏழு என்று இருபத்தொரு உலகங்களுக்குத் தாயே!
- தந்தையே!
- நாயேனை ஆட்கொண்ட அறிவிலியே!
- பிறவி நோய்  கரு மருந்தே!
- தேன் போல இன்பத்தை எப்பொழுதும் அடியார்களிடம் ஒழுக விடுபவனே!
- எதுவாக வேண்டுமோ, அதுவாகப் பயன் தரும் மணியே!
- என்று இவ்வாறெல்லாம் புகழ்ந்து. போற்றி இரவு பகல் என்று எந்நேரமும் நினது அழகிய திருவடிகளா கிய தா ரை மலர்களை சிந்தயைில் வைத்து, ஆராய்ந்து,
- பொருந்தி இருப்பது எந்நாளோ?

## ஞானக்கண் – வேதாத்திரியம்

"இருபுருவ மையத்தில் இருள்நீக்கி அருள் விளக்கும்

ஒருவாசல் உண்டதுவே உயிர் நிலையை உற்றுணரும்

திருவாசல்! உயிர் அறிவாய் தெய்வநிலைஎய்தும் வழி!

கருவாசலும், ஞானக்கண் என்பதும் ஈதுவே!" (ஞாக.பா.1465)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

# 10. திருவாசகம் தரும் இறைவழிபாடு

அன்பும் கருணையும் கொண்ட இறைநிலை – அருள்வெளியை – இறைவனை, உயிர்கள் தங்கள் பக்குவ நிலை க்க ளுக்கு ஏ றபத் , தம்முள் பதித்து வைத்துள்ளன.

தம்முள் பதிந்த இறை உருவங்களில் மனத்தைப் பதித்த உயிர்கள், அந்த உருவங்களோடு ஒன்றி விடுகின்றன. இதனால் உயிர்கள் அமைதியும் இன்பமும் பெறுகின்றன.

"வழிபாடு" என்ற சொல்லுக்கு, "வழியில் செல்லுக, பின்பற்றுக, வணக்கம், பஜனை, சமயக்கோட்பாடு" முதலான பல பொருட்களைக் கழகத் தமிழகராதி தருகின்றது.

"வழிபாடு" என்பது "வழிபாடுதல்" என்னும் பொருளுக்குரிய சொல்லாகும். "வழிபடு" என்னும் தொழிற்பெயர், பெயர்ச் சொல்லாக மாறும் போது ஈற்றியல் நீண்டு வழிபாடு என்றாகின்றது.

"பண்படு" என்னும் சொல் "பண்பாடு" என்றாகியது போல இச்சொல்லும் உள்ளது. "வழி" என்பதற்கு "நெறி" என்றும் "படு" என்பதற்குச் "செல்லுதல்", "பொருந்துதல்", என்றும் பொருள் கற்பிக்கப்பட்டு இறையடியவர்களும் ஞானிகளும் அறிஞர்களும் காட்டியுள்ள நெறியில் செல்லுக என்று அறிவுறுத்தும் பாங்கில் இச்சொல் இன்று ஆளப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

இறைவனை, வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு பாமாலை தொடுத்து வழிபடுவதை, நாம் வழிபாடு எனக் கொள்ளலாம்.

மூன்று வழிபாட்டு நெறிகளை பரஞ்சோதி முனிவர் தம்முடைய திருவியையாடல் புராணத்தில் வேதத்திற்குப் பொருளருளிச் செய்த படலத்தில் விளக்குகின்றார்.

"கிரியையால் ஞானம் தன்னால் கிளர்சிவ பத்தி, பூசை
தரிசனம் சைவலிங்க தாபனம் செய்தல் ஈசற்கு
உரிய மெய்ன்பர் பூசை உருத்திர சின்னம் தாங்கல்
அரியதே சிவன்பாற் பத்தி அனைத்தையும தெரியலாகும்"(பாடல்4)

- திருநாவுக்கரசர் தொண்டு நெறியிலும்,
- திருஞானசம்மபந்தர் நன்மகன்மை நெறியிலும்,
- சுந்தரர் தோழமை நெறியிலும்,

- மாணிக்கவசகர் ஞானநெறியிலும்

நின்று இறைவனை வணங்கி வழிபட்டு வந்துள்ளனர்.

திருவாசகத்தில் நான்கு வழிபாட்டு முறைகளை மாணிக்கவாசகர் சொல்கிறார்.

1. பேரின்பத்தில் திளைத்தல்
2. அகங்குழைந்து வழிபடுதல்,
3. இறையருளோடு கலத்தல்
4. இறையன்பில் உறுதி

என வகைப்படுத்தி உள்ளார்.

இறையருளை வேண்டி உள்ளம் உருக வழிபாடுகிறார் தாயுமானவர்.

அங்கை கொடுமலர் தூவி அங்கமது புளகிப்ப
    அன்பினால் உருகி விழிநீர்
ஆறாக, ஆராத முக்தியினது ஆவேச
    ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவும் மொழி
    தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறி இலாத் துன்மார்க்கனேனையும்
    தண் அருள் கொடுத்து ஆள்வையோ?
துங்கமிகு பக்குவச் சனகன் முதல் முனிவோர்கள்
    தொழுது அருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியை ஒரு சொல்லால் உணர்த்தியே
    சொரூப அநுபூதி காட்டிச்
செங்கமல பீடம் மேல் கல்ஆல் அடிக்குள் வளர்
    சித்தாந்த முக்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே!
    சின்மயானந்த குருவே!     (தா.பா.26.சின்மயானந்தகுரு.1)

எப்படி, உடலானது மகிழ்ச்சியினால் அசைய, அன்பினால் மனம் உருகி, கண்களில் நீரானது ஆறுபோல் பெருக, முத்தியின் மீதுகொண்ட வெறியுடன் கூடிய ஆசையாகிய கடலுக்குள் மூழ்க, "சங்கரா! சுயம்புவே! சம்புவே!" என மொழி குளறப் போற்றி வணங்கும் ஒழுக்க நெறியில் நில்லாது, தவறான நெறியில் நிற்கும் என்னையும், தேவரீரது குளிந்த திருவருளைத்தந்து ஆட்கொள்வீரோ? என்று தாயுமானவர் பாடியுள்ளார்.

எனது இதயமே கோயில், உன்னைப் (இறைவன்) பற்றிய நினைவுகளே மலர்கள், உன் மீதான அன்பே மஞ்சனநீர் (அபிஷேகத்திற்கான பால், தேன்). எனவே, இதுபோன்ற பூஜையே என்னால் செய்ய முடியும்; உடனே வருவாய் என் இறைவா என்று வழிபடுகிறார்.

உட்கார்ந்த இடத்தில் இருந்தே இறைவனை அழைக்கும் அளவுக்கு ஆத்ம பலம் சித்தர்களுக்கு இருந்தது.

ஆனால் இதுபோன்ற பலம் மனிதர்களுக்கு வேண்டும். இதற்கான பயிற்சி, முயற்சி, சாதனை செய்வது, தவம் செய்வது போன்ற விளக்கங்களை எலலாம் திருவாசகப் பாடல்களில் நாம் காணலாம்.

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
    கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம்
முப்பாய் மூவா முதலாய் நின்ற
    முதல்வா முன்னே எனைஆண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
    பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவது என்று கொல்லோ என்
    பொல்லா மணியைப் புணர்ந்தே." (447)

- என் செதுக்கப்படாத மாணிக்க மணியே!
- எல்லா உலகங்களையும் படைப்பவனே!
- காப்பவனே!

- ஒடுக்குபவனே!
- இடம் அகன்ற ஆகாயத்தில் உள்ள தேவர்களுக்கு எல்லாம் மூத்தவனே!
- என்றும் முதுமை அடையாதவனே!
- யாவர்க்கும் முதலாய் விளங்கும் முதல்வனே!
- முன்பே என்னை ஆண்டு கொண்ட அந்தணனே!
- எம் மேலானவனே!
- என்று பலவாறாகப் புகழ்ந்து பாடி,
- நினது அழகிய மலர் போன்ற திருவடிகளைப் பொருந்தி இருப்பது எப்போது?

இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்கவிட்டு
ஏற்படும்ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க,
நிறைநிலையேயெ தானாக உணர்வ தாகும்.
நித்தம் நித்தம் உயிர்உடலில் இயங்கு மட்டும்.
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்.
கறைநீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்.
கரைந்துபோம் தன்முனைப்பு. காணும் தெய்வம்."
(ஞாக.பா.1487)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வளமுடன்.

வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து

## YOUTUBE LINKS

1.அன்னை ஆண்டாளும் புணர்ந்தாள் ஆசான் மாணிக்கவாசகரும் புணர்ந்தார்! https://youtu.be/e5CMkCvhDic

2.பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும் https://youtu.be/8d-s2uzo4ZY
3.இறைவனுடன் கலந்த ஆண்டாள் https://youtu.be/BUF7sHbrHrU
4.இசையால் ராமனுடன் கலந்தவர் https://youtu.be/epmdRhsXytE
5.உயிரில் மனமடங்க https://youtu.be/O4kHpDk6GMU
6.இறைவனுடன் கலந்த காரைக்கால் அம்மையார்
https://youtu.be/1RixwFiRSxg
7.நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்
https://youtu.be/OxQSZLJ8WUs
8.நெக்கு நெக்கு உள் உருகி உருகி https://youtu.be/Zh_CrZQRej8
9.இறை வழிபாட்டில் ஏழு படிகள் https://youtu.be/DTgdEwWUIqk
10. திருவாசகம் தரும் இறைவழிபாடு https://youtu.be/rzUl1LGPcy8

## துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. ஆண்டாள் திருப்பாவை
9. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
10. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்

8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்

18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து

19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்

11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000

2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்கனை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்

11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4

46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2

81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து

116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?